இந்து தமிழ் திசை

புதுச்சேரி ஜிப்மரில்

கண்தானம் செய்தவர்களின் குடும்பத்தினர் கவுரவிப்பு

புதுச்சேரி

ஜிப்மர் கண் மருத்துவத் துறை சார்பில், கண்தானத்தின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேசிய கண்தான விழிப்புணர்வு இருவார விழா கடந்த ஆகஸ்ட் 25 முதல் நேற்று முன்தினம் (செப்.8) வரை அனுசரிக்கப்பட்டது.

ஜிப்மர் கண் மருத்துவத் துறையின் பேராசிரியர் டாக்டர் சுபாஷினி களியப்பெருமாள் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக ஜிப்மர் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் சாகா வினோத் குமார் கலந்து கொண்டு, கண்தானம் செய்தவர்களின் குடும்பத்தினரை பாராட்டி கவுரவித்தார். ஜிப்மரின் மருத்துவமனை கருவிழி மீட்புத் திட்டம் சார்பில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கண்களை மீட்டெடுக்கும் பணியில் தொடர்ந்து உரிய நேரத்தில் ஆதரவு வழங்கி வரும் குழுவினரும் கவுரவிக்கப்பட்டனர். ஜிப்மர் கண் மருத்துவத் துறைத் தலைவர் மற்றும் ஜிப்மர் கண் வங்கி இயக்குநர் டாக்டர் ரமேஷ் பாபு உள்ளிட்டோர் பேசினர். மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து கண்தானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் நாடக வடிவிலான நிகழ்வு, குறும்படங்களும் திரையிடப்பட்டன.

நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியாக, ஜிப்மர் கண் மருத்துவத் துறையின் பேராசிரியர் டாக்டர் நிருபமா கஸ்தூரி நன்றி கூறினார்.

தினமணி

கருவிழிகளின் தேவை அதிகரித்து வருகிறது: ஜிப்மர் மருத்துவக் கண்காணிப்பாளர் பேச்சு

புதுச்சேரி, செப்.9: தானமாகக் கிடைக்கும் கருவிழிகளின் தேவை அதிகரித்து வருகிறது என்று ஜிப்மர் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் சாகா வினோத் குமார் கூறினார்.

ஜிப்மரில் 41-ஆவது தேசிய கண்தான விழிப்புணர்வு இரு வார விழா செவ்வாய்க்கிழமை நிறைவடைந்தது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஜிப்மர் மருத்துவக் கண்காணிப்பாளர் சாகா வினோத் குமார் பேசியதாவது:

கருவிழி பார்வையின்மையை எதிர்கொள்வதில் முக்கியமான மருத்துவச் சிகிச்சையாக கருவிழி மாற்று அறுவை சிகிச்சை விளங்கி வருகிறது. இந்தியாவில் கருவிழி பார்வையின்மை ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதாரப் பிரச்னையாக இருக்கிறது. கருவிழி தானமாக கிடைக்கும் அளவை விட, அதன் தேவை அதிகமாக இருக்கிறது. எனவே, இதற்கான இடைவெளியைக் குறைக்க சமூகத்தின் தொடர்ச்சியான பங்கேற்பும் விழிப்புணர்வும் அவசியம். இந்த விழிப்புணர்வு கருத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களை இணைத்து செயல்படுத்தி வரும் இத்துறையின் முயற்சி பாராட்டத்தக்கது என்றார். மேலும், கண்தானம் செய்த குடும்பத்தினரின் பங்களிப்பை பாராட்டி கௌரவித்தார். நிகழ்ச்சியில் ஜிப்மரின் மருத்துவமனை கருவிழி மீட்புத் திட்டம் சார்பில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கண்களை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவினரும் கௌரவிக்கப்பட்டனர்.

ஜிப்மர் கண் மருத்துவத் துறையின் பேராசிரியர் சுபாஷினி கலியப் பெருமாள், ஜிப்மர் கண் மருத்துவத் துறைத் தலைவர் மற்றும் ஜிப்மர் கண் வங்கி இயக்குநர் கே. ரமேஷ் பாபு, ஜிப்மர் கண் மருத்துவத் துறையின் பேராசிரியர் நிருபமா கஸ்தூரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவின் போது, கண்தானத்தின் முக்கியத்துவம் குறித்து மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து நாடக வடிவிலான நிகழ்ச்சியை வழங்கினர். மேலும், கண் மருத்துவத் துறையைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் மருத்துவப் பயிற்சி மருத்துவர்களால் தயாரிக்கப்பட்ட 2 குறும்படங்களும் திரையிடப்பட்டன. பல்வேறு போட்டிகளில் பங்கேற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

புதுவை ஜிப்மரில் குடல் அழற்சி நோயாளிகளுடன் விழிப்புணர்வு கலந்துரையாடல்

புதுச்சேரி, செப்.9- புதுவை ஜிப்மர் மருத்துவ இரைப்பை குடலியல் துறை சார்பில், குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டோருக்கான காலாண்டு நலவழிகாட்டல் மற்றும் கலந்துரையாடல் சந்திப்பு நடந்தது.

நீண்டகால நோய்களுக்கான சிகிச்சை என்பது மருத்துவ சிகிச்சையுடன் மட்டுமே நின்றுவிடாமல், நோயாளிகளின் விழிப்புணர்வு, மனநலம் மற்றும் சமூக ஆதரவையும் உள்ளடக்கிய முழுமையான அணுகுமுறையாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜிப்மர் மருத்துவ இரைப்பை குடலியல் துறை பேராசிரியரும் துறைத் தலைவருமான டாக்டர் பழனிவேல் மோகன் தலைமை தாங்கினார். மருத்துவ இரைப்பைகுடலியல் துறையின் கூடுதல் பேராசிரியர் டாக்டர் செந்தமிழ்ச் செல்வன், ஜிப்மர் மனநலத் துறையின் மருத்துவ உளவியலாளர் அறிவழகன், மருத்துவ இரைப்பை குடலியல் துறையின் உணவியல் நிபுணர் ரமா பிரபா ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடல் மற்றும் கேள்வி-பதில் அமர்வில், நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தங்களது சந்தேகங்களை மருத்துவ நிபுணர்களிடம் நேரடியாகக் கேட்டு விளக்கம் பெற்றனர்.

உடல் மற்றும் மன நலத்தை மேம்படுத்துவதில் யோகா மற்றும் தளர்வுப் பயிற்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், விழிப்புணர்வு யோகா செயல்விளக்கக் காணொளி இடம் பெற்றது.

நிகழ்ச்சியை ஜிப்மர் மருத்துவ இரைப்பை குடலியல் துறையின் மருத்துவ சமூகப் பணியாளர் ஹெனா மெல்யா ஒருங்கிணைத்தார்.